**செ.வெ.எண்-19** **நாள்-11.01.2020**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், ஜெய்ராம் கல்வி அறக்கட்டளை சார்பில் பயிற்சி பெற்றவர்களுக்கு பயிற்சிக்கான சான்றதிழ்களும், பணிநியமன ஆணைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப,** அவர்கள் வழங்கி பேசியதாவது,

திறன் வளர்ப்பு பயிற்சி மையம் பிரதம மந்திரி கௌஷல் கேந்த்ரா என்ற திறன் வளர்ப்பு பயிற்சி மையம் நாட்டில் உள்ள அனைத்து ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்கும் ஒன்று மட்டும் என்ற அடிப்படையில் இந்திய அரசால் வழங்கப்படுகிறது. இந்த சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிகளுக்குள்ளான அனுமதியை நமது ஜெய்ராம் கல்வி அறக்கட்டளை பெற்றுள்ளது என்பதை அறிந்து மிகவும் மகிழ்வுற்றேன். இத்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது நேஷ்னல் ஸ்கில்ஸ் டெவலப்மெண்ட் கார்பரேஷன் (NSDC) அமைப்பினால் தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் குறிக்கோள் இந்திய இளைஞர்களுக்கு தொழில் முறை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து அதன் மூலம் அவர்தாம் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். இப்பயிற்சிக்கு ஆகும். செலவு அனைத்தையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின் வேலை வாய்ப்பும் வழங்கப்படுகிறது என்பது கூடுதல் சிறப்பு. பயிற்சியின் முழுமையாக நிறைவு செய்யும் மாணவர்களுக்கு இந்திய அரசால் ரூபாய் 2 லட்சம் வரை பெரும் வகையில் இலவச விபத்து காப்பீடு பீமா சுரக்சா யோஜனா (Beema Suraksha Yojana) என்ற சிறப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. குறைந்த காலப் பயிற்சி பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை தொடர முடியாமல் பாதியில் விட்ட அல்லது வேலை கிடைக்காத இந்திய பிரைஜைகளுக்கு இப்பயிற்ச்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியானது பி எம் கேவி ஓய் (PMKVY) பயிற்சி மையங்களில் நேஷனல் ஸ்கில்ஸ் குவாலி∴பிகேஷன் ∴ப்ரேம்வோர்க்கைப் (QP) பின்பற்றி வழங்கப்படுகிறது.

மென்பொருள் திறன்கள் சுய தொழில் முனைவுஇபினான்சியல் மற்றும் டிஜிட்டல் அறிவு போன்ற காலங்களை உள்ளடக்கியது. பயிற்சி வழங்கப்பட்டு, தேர்வுகளில் வெற்றி பெறுவோர் இத்திட்டத்தின் இட்ரெய்னிங் பார்ட்னானார்கள் மூலம் தகுந்த பணிகளில் பணியமத்தப்படுவர்.

வேலை வாய்ப்பு சுய தொழிலுக்கு வழிகாட்டுதல் டிரைனிங் பார்டன்ர்களால் பணியிலமர்த்தப்படுவர். மேலும் சுய தொழில் தொடங்க முற்படுவோருக்கு அவர்கள் தொழில்முனைவு வழிக்காட்டுதலும் வழங்குவர். இத்திட்டத்தின் கீழ் படிக்க கூடியவர்களுக்கு மாவட்ட தொழில் மையத்தின் மூலம் மானிய வசதியுடன் கூடிய கடன் பெற்று தரப்படும்.

மேலும், தையல் கலை பயிற்சி, கணிணி பயிற்சி, உதவி மின்பொறியாளர், உணவு மற்றும் பான சேவை போன்ற பயிற்சிகள் பிரதான் மந்திரி கௌஷல் கேந்த்ரா எனற் திறன் வளர்ப்பு பயிற்சி மையம் அரியலூரில் வழங்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், தலைமை பொது மேலாளர்கள் ஜெ.பாலகிருஷ்ணன், தாமஸ், மண்டல மேலாளர் ஆர்.ஜெகதீஸன், கிளை மேலாளர் சங்கர் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**